



# மாற்றுத் திறனாளிகள் நலத்துறை

## மானியக் கோரிக்கை

## எண். 52

# அறிவிப்புகள்

# 2022 - 2023

# மாற்றுத் திறனாளிகள் நலத்துறை

## மானியக் கோரிக்கை
## எண். 52

## அறிவிப்புகள்
## 2022 - 2023

**மு.க. ஸ்டாலின்**
முதலமைச்சர்

1. மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 24 பள்ளிகள், நிறுவனங்களின் கட்டடங்கள் ரூ.2.00 கோடி செலவில் மறுசீரமைக்கப்படும்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் அரசு சிறப்புப் பள்ளிகள், அரசு மறுவாழ்வு இல்லங்கள், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகங்கள் என 24 கட்டடங்களுக்கு, மேற்கூரை சரிசெய்தல், கணினி ஆய்வகம் அமைத்தல், கழிப்பறை அமைத்தல், இல்லவாசிகளின் விடுதிகள், அலுவலக கட்டட பராமரிப்பு போன்றவற்றிற்காக ரூ.2.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்து மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**2. தென் மாவட்டங்களில் செவித்திறன் குறைபாடுடைய 60 மாணவர்கள் பயன்பெறும் வகையில் உயர்கல்வியில் பி.காம், பி.சி.ஏ பாடங்கள் ரூ.18.06 இலட்சம் செலவில் அறிமுகம் செய்யப்படும்.**

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் கட்டுப்பாட்டில், செவித்திறன் குறையுடையோருக்கென 10 அரசு சிறப்புப்பள்ளிகள் செயல்படுகின்றன. இப்பள்ளியில் பயிலும் குழந்தைகள் பள்ளிப்படிப்பு முடித்தப்பின் உயர்கல்வி பயில்வதற்கான வாய்ப்பு தற்போது சென்னையில் உள்ள மாநிலக் கல்லூரியில் மட்டுமே நடைமுறையில் உள்ளது. இதனால் சென்னை, வடமாவட்டங்களில் உள்ள செவித்திறன் குறையுடைய மாணாக்கர்கள் மட்டுமே பயன்பெற்று வருகின்றனர்.

இதன்பொருட்டு, தென் மாவட்டங்களில் உள்ள செவித்திறன் குறைபாடுடைய மாணாக்கர்கள் உயர்கல்வி பயில ஏதுவாக, கணினி அறிவியல், வணிகவியல் ஆகிய இளங்கலை பட்டப் படிப்பினை பயில்வதற்கு உயர் கல்வித்துறையின் இசைவுடன் ரூ.18.06 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பாடங்கள் அறிமுகப்படுத்தப்படும்.



**3. சென்னை மாவட்டத்திலுள்ள மாற்றுத்திறனாளிகள் எளிதில் சேவையை பெறுவதற்காக சென்னை மாவட்டத்தில் ரூ.1.51 கோடி செலவில் கூடுதலாக ஒரு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் அமைக்கப்படும்.**

சென்னை மாவட்டம் தற்போது திருவள்ளூர் மாவட்டத்தில் இருந்து அம்பத்தூர், மாதவரம், மதுரவாயல், திருவொற்றியூர் ஆகிய 4 வருவாய் வட்டங்களும், செங்கல்பட்டு மாவட்டத்தில் இருந்து ஆலந்தூர், சோழிங்கநல்லூர் ஆகிய 2 வருவாய் வட்டங்களும் சென்னை மாவட்டத்துடன் கூடுதலாக 6 வட்டங்கள் இணைக்கப்பட்டு தற்போது 16 வருவாய் வட்டங்கள் உடன் செயல்பட்டு வருகிறது.

சென்னை மாவட்டத்தில் இதுவரை 69 ஆயிரத்து 721 மாற்றுத்திறனாளிகள் தேசிய அடையாள அட்டைகள் பெற்றுள்ளனர். சென்னை மாவட்டத்தில் தற்போது மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டம், 2016-ன் படி 60 பதிவு பெற்ற

சிறப்புப் பள்ளிகள், இல்லங்கள், நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்னை மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் தினந்தோறும் அதிக அளவில் மாற்றுத்திறனாளிகள் நலத்திட்ட உதவிகள் பெற வருகின்றனர். அவர்களுக்கு கிடைக்க வேண்டிய உதவிகள் விரைவில் சென்றடையும் வகையில் சென்னை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து வட சென்னை மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், தென் சென்னை மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் ரூ.1.51 கோடி நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்.



4. மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் சுயதொழில் கடன் உதவி திட்டத்தின் மூலம், அளிக்கப்படும் ரூ.25,000/- தொகையினை அறிவுசார் குறைபாடுடையோர், புற உலக சிந்தனையற்றோர், தசை சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் பெற்றோருக்கும் நீட்டித்து 400 பயனாளிகளுக்கு வழங்கும் வகையில் ரூ.5.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் மாற்றுத்திறனாளிகள் சுயமாக தொழில் செய்யும் வகையில் குறுந்தொழில் நிறுவனங்கள் தொடங்குவதை ஊக்குவிக்கும் பொருட்டு வங்கிக் கடன் பெற ஏற்பாடு செய்யப்படுகிறது. மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் கடன் தொகையில், மூன்றில் ஒரு பங்கு அல்லது ரூ.25,000/- இவற்றில் எது குறைவான தொகையோ, அத்தொகை மாநில அரசால் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. தற்போது இத்திட்டத்தினை அறிவுசார் குறைபாடுடையோர், புற உலக சிந்தனையற்றோர், தசை சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் பெற்றோருக்கும் நீட்டித்து 400 பயனாளிகளுக்கு வழங்கும் வகையில் ரூ.5.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

5. மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் திருமண நிதியுதவி திட்டத்தின் மூலம் தற்பொழுது வழங்கப்பட்டு வரும் நிதி உதவியினை பாதித்தொகை ரொக்கமாகவும் மீதமுள்ள தொகையினை தேசிய சேமிப்புப் பத்திரமாகவும் வழங்கும் முறையினை மாற்றி முழுத் தொகையையும் ரொக்கமாக வழங்கப்படும்.

கை, கால் இயக்க குறைபாடுடையோர், பார்வைத்திறன் குறைபாடுடையோர், செவித்திறன் குறைபாடுடையோர் உள்ளிட்ட அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் திருமண உதவித்தொகை வழங்கப்படுகிறது. மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் திருமண நிதியுதவி திட்டத்தின் மூலம் தற்பொழுது வழங்கப்பட்டு வரும் பட்டப்படிப்பு படித்தோருக்கு ரூ.50,000/-, ஏனைய நபர்களுக்கு ரூ.25,000/- நிதி உதவியினை பாதித்தொகை ரொக்கமாகவும் மீதமுள்ள தொகையினை தேசிய சேமிப்புப் பத்திரமாகவும் வழங்கும் முறையினை மாற்றி முழுத் தொகையையும் ரொக்கமாக வழங்கப்படும். இதன் மூலம் 500-க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் பயனடைவர்.



6. மாற்றுத்திறனாளிகள் சுய தொழில் புரிந்து வாழ்வில் முன்னேறுவதற்கு தையல் இயந்திரம் வழங்கப்படுகிறது. இதற்கு தற்போது உள்ள வயது உச்ச வரம்பினை 45-ல் இருந்து 60 ஆக நீட்டித்து ரூ.1.48 கோடி செலவில் வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம் 2100-க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் பயனடைவர்.

சுயவேலைவாய்ப்பு திட்டத்தின் மூலம் மாற்றுத் திறனாளிகளின் பொருளாதார நிலையை மேம்படுத்த அவர்களுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தில் உடல் இயக்கக் குறைபாடுடையோர், செவித்திறன் பாதிக்கப்பட்டோருக்கு மட்டுமல்லாது, மிதமான அறிவுசார் குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள், கடுமையான அறிவுசார் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளின் தாய்மார்களுக்கும் மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகளின் வயது உச்ச வரம்பினை 45-ல் இருந்து 60 ஆக நீட்டித்து ரூ.1.48 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

7. மாநிலம் முழுவதும் உள்ள 62 விளையாட்டு அரங்கங்களில் ரூ.37.20 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் தணிக்கை மேற்கொண்டு தடையற்ற சூழல் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டம் 2016-ல், பொது கட்டடங்கள், போக்குவரத்து சாலைகளில் மாற்றுத்திறனாளிகள் பயன் படுத்துவதற்கு ஏற்றவகையில் தடையற்ற சூழல் அமைக்க வலியுறுத்தப்பட்டுள்ளது. அதனை நிறைவேற்றும் வகையில், அரசு மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, கல்வித்துறை, சுகாதாரம், பொதுப் பணித்துறைக்கு சொந்தமான கட்டடங்கள், சுற்றுலா தளங்களில் தடையற்ற சூழல் அமைக்க தணிக்கை மேற்கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக பல்வேறு விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்ளும் மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்களுக்கு



விளையாட்டு அரங்கில் தடையற்ற சூழல் அமைக்க. மாநிலம் முழுவதும் உள்ள 62 விளையாட்டு அரங்கங்களில் ரூ.37.20 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் தணிக்கை மேற்கொண்டு தடையற்ற சூழல் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

8. முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்காக முதற்கட்டமாக, திருப்பூர், கோயம்புத்தூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் ரூ.1.00 கோடி செலவில் 75 நபர்கள் பயன்பெறும் வகையில் 3 சிறப்பு இல்லங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம், அனைத்து வகையான மாற்றுத் திறனாளிகளுக்கும் அவர்களின் உடல் குறைபாடுகளுக்கு ஏற்றவாறு மறுவாழ்வு சிகிச்சை, பயிற்சி வழங்கப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் மறுவாழ்வு இல்லங்கள் மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இந்நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு முதற்கட்டமாக திருப்பூர், கோயம்புத்தூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் 75 நபர்கள் பயனடையும் வகையில் ரூ.1.00 கோடி செலவில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் பராமரிப்பு இல்லங்கள் அமைக்கப்படும்.



9. அ) மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் அரசு, அரசு உதவி பெறும் தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்படும் 235 இல்லங்கள், சிறப்புப் பள்ளிகளில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கும் உணவூட்டு மானியம் ரூ.900/- லிருந்து ரூ.1200/- ஆக உயர்த்தி ரூ.3.92 கோடி கூடுதல் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் அரசு சிறப்புப்பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சிறப்புப் பள்ளிகள் ஆகியவற்றில் கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கும், மறுவாழ்வு இல்லங்களில் தங்கியிருக்கும் மனநலம் குன்றியோர்களுக்கும் மாதாந்திர உணவூட்டு மானியமாக ரூ.900/- அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

10. பொது கட்டடங்களில் மாற்றுத்திறனாளிகள் எளிதாக பயன்படுத்தும் வகையில் தடைகளற்ற சூழலை ஏற்படுத்தியுள்ள சிறந்த அரசு நிறுவனம், தனியார் நிறுவனத்திற்கு ரூ.1.60 இலட்சம் செலவில் 2 மாநில விருதுகள் வழங்கப்படும்.

தமிழ்நாடு அரசு, மாற்றுத் திறனாளிகளுக்கு சிறந்த பணி செய்த தனிநபர்கள், நிறுவனங்களை ஊக்குவிக்கும் பொருட்டு மாநில விருதுகள் வழங்குகிறது. இந்த விருதுகள் ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தின நாள், அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தின நாள் (டிசம்பர் 3-ம் நாள்) ஆகிய நாட்களில் வழங்கப்படுகிறது.

மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டம்,2016, பிரிவு 45(1)-இன்படி அனைத்து பொது கட்டடங்களும் மாற்றுத் திறனாளிகளின் பயன்பாட்டிற்கு உகந்தவையாக மாற்றி அமைக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. எனவே, அரசு, தனியார் நிறுவனங்கள், தங்களுடைய கட்டடங்களில் மாற்றுத் திறனாளிகளின் பயன்பாட்டிற்கு தடையில்லா சூழலுக்கான வசதிகளை சிறப்பாக அமைப்பதை ஊக்குவிக்க இவ்விருதுகள் வழங்கப்படும்.



ஒவ்வொரு ஆண்டும் சிறந்த அரசு நிறுவனத்திற்கான விருது, சிறந்த தனியார் நிறுவனத்திற்கான விருது என இரண்டு விருதுகள் 10 கிராம் தங்கப் பதக்கம், பாராட்டு சான்றிதழுடன் ரூ.1.60 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் வழங்கப்படும்.

11. புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள செவித்திறன் குறைபாடுடையோருக்கான நடுநிலைப் பள்ளியினை உயர்நிலைப் பள்ளியாகவும், விருதுநகர், ஈரோடு மாவட்டங்களில் உள்ள இரண்டு செவித்திறன் குறைபாடுடையோருக்கான உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் ரூ.1.15 கோடி செலவில் 128 மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் தரம் உயர்த்தப்படும்.

மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டில் 22 அரசு சிறப்புப்பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இதில் செவித்திறன் குறைபாடுடையோருக்கு 10 அரசு சிறப்பு பள்ளிகள் செயல்படுகின்றன. இப்பள்ளிகள் இரண்டு மேல்நிலை பள்ளி, மூன்று நடுநிலை பள்ளி, ஐந்து உயர்நிலை பள்ளிகளாக செயல்படுகிறது.

இச்சிறப்புப் பள்ளிகளை தரம் உயர்த்துவதன் மூலம் செவித்திறன் குறைபாடுடைய மாணாக்கர்கள் தொடர்ந்து அதிக தூரம் பயணிக்காமல் மேற்படிப்பினை தொடர இயலும்.



இதனால் அரசுக்கு ரூ.1.15 இலட்சம் செலவினம் ஏற்படும். இம்மாணவர்களுக்கு மேலும் உயர் கல்வி வழங்க இப்பள்ளிகளின் தரம் உயர்த்துவதன் மூலம் தங்கள் பகுதிகளிலேயே உயர் கல்வி பெறுவதை கருத்தில் கொண்டு புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள செவித்திறன் குறைபாடுடையோருக்கான நடுநிலைப் பள்ளியினை உயர்நிலைப் பள்ளியாகவும், விருதுநகர், ஈரோடு மாவட்டங்களில் உள்ள இரண்டு செவித்திறன் குறைபாடுடையோருக்கான உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் ரூ.1.15 கோடி செலவில் 128 மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் தரம் உயர்த்தப்படும்.

12. அரசு வளாகங்களில் மாற்றுத்திறனாளிகள் ஆவின் பாலகம் அமைக்க தேவையான வாடகை, முன்தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்து தகுதியான பயனாளிகளுக்கு பொதுப்பணித்துறை, வருவாய்த்துறை ஆகிய துறைகளுடன் ஆவின் நிறுவனம் இணைந்து ஆவின் பாலகம் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாற்றுத்திறனாளிகள் பொருளாதார மேம்பாடு காண சுயவேலைவாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் ஆவின் நிறுவனத்தின் பால் உற்பத்திப் பொருள் விற்பனை மையம் அமைக்கும் திட்டம் 200 மாற்றுத்திறனாளிகள் பயனடையும் வகையில் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்காக ஆவின் நிறுவனத்திற்கு பயனாளிகள் செலுத்த வேண்டிய முன் வைப்பு தொகை, ஆவின் பொருட்களை கொள்முதல் செய்தல் ஆகியவற்றிற்காக ஒரு பயனாளிக்கு ரூ.50,000/- விதம் 200 பயனாளிகளுக்கு மானியம் வழங்கப்பட்டு வருகிறது.



இத்திட்டத்தில் பயனாளிகள் வாடகை செலுத்துவதினால் அவர்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை தவிர்க்க அரசு வளாகங்களில் மாற்றுத்திறனாளிகள் ஆவின் பாலகம் அமைக்க தேவையான வாடகை, முன்தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்து தகுதியான பயனாளிகளுக்கு பொதுப்பணித்துறை, வருவாய்த்துறை ஆகிய துறைகளுடன் ஆவின் நிறுவனம் இணைந்து ஆவின் பாலகம் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

13. மாற்றுத் திறனாளிகளுக்கு சாலை ஓரங்களில் தள்ளுவண்டி கடை நடத்த நகர விற்பனை குழுவின் விதிமுறைப்படி முன்னுரிமை அடிப்படையில் அனுமதி வழங்கப்படும்.

மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டம், 2016 ல் மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு, வாழ்வாதாரம் ஏற்படுத்தும் திட்டங்களில் முன்னுரிமை அளிக்க வலியுறுத்தப்பட்டுள்ளவாறு, அரசு, பல்வேறு திட்டங்கள் மூலம் வேலைவாய்ப்பு, சுயவேலைவாய்ப்பு வழங்கி மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி வருகிறது. இந்நிலையில் சாலை ஓரங்களில் வியாபாரம் செய்வதற்கு ஏதுவாக மாற்றுத் திறனாளிகளுக்கு தள்ளுவண்டி கடைகள் நடத்த நகர விற்பனை குழுவின் விதிமுறைப்படி முன்னுரிமை அடிப்படையில் அனுமதி வழங்கப்படும்.



14. அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் மாவட்ட ஆட்சியர் கூட்டம் நடத்தும் பொழுதும் முக்கிய நிகழ்வுகளின் பொழுதும் செவித்திறன் பாதிக்கப்பட்டோர் பயன்பெறும் வகையில் சைகை மொழிப்பெயர்ப்பாளர் வசதி மாவட்ட நிர்வாகம் மூலம் செய்து தரப்படும்.

செவித்திறன் குறைபாடுடையோர் பிறருடன் தடையின்றி தகவல் பரிமாற்றத்தினை எளிதில் மேற்கொள்ள, குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்டம், மக்கள் குறைதீர்க்கும் முகாம்கள் ஆகியவற்றிற்கு வரும் செவித்திறன் குறைபாடுடையோர்களின் கருத்தை அறிந்து அதற்குரிய அலுவலரிடம் அதனை தெரிவித்து அலுவலர் அவர்களால் தெரிவிக்கும் கருத்தை கருத்து பரிமாற்றம் செய்ய ஏதுவாக சைகை மொழிபெயர்ப்பாளரின் அவசியத்தை அறிந்து ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட நிர்வாகம் மூலம் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

15. மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016 -ல் வலியுறுத்தப்பட்டுள்ள அரசு வேலைவாய்ப்பில் 4 சதவீதம் இட ஒதுக்கீட்டினை மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்க ஏதுவாக உகந்த பதவியிடங்கள் கண்டறியப்பட்டு பணிநியமனம் செய்வதை கண்காணிக்கும் பொருட்டு உயர்மட்ட குழு அமைக்கப்படும்.

மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016, பிரிவு 34-ல் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுத் திறனாளிகளுக்கு அரசுத்துறைகள், அரசு பொதுத்துறை நிறுவனங்கள், வாரியங்கள், குழுமங்கள், பல்கலைக்கழகங்கள், அரசு கட்டுப்பாட்டில் செயல்படும் நிறுவனங்களில் 4 சதவீதம் இடஒதுக்கீடு அடிப்படையில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் அரசுத் துறைகளில் 'ஏ', 'பி' தொகுதிகளில் 559 பதவியிடங்கள் மாற்றுத் திறனாளிகளுக்கு உகந்த பதவியிடங்களாக கண்டறியப்பட்டு அரசாணை வெளியிடப் பட்டுள்ளது. அரசு பொதுத்துறை



நிறுவனங்கள், வாரியங்கள், குழுமங்கள், அரசுக் கட்டுப்பாட்டில் செயல்படும் நிறுவனங்களில் 'ஏ', 'பி' தொகுதிகளில் உள்ள பதவியிடங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு உகந்த பதவியிடங்களைக் கண்டறிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 'சி', 'டி' தொகுதி பதவியிடங்களைப் பொறுத்தவரையில் அனைத்து பதவியிடங்களும் மாற்றுத்திறனாளிகளுக்கு உகந்த பதவியிடங்களாக கண்டறியப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அரசின் பல்வேறு துறைகள் மூலம் மேற்கொள்ளப்படும் இந்நடவடிக்கைகளை கண்காணிக்க, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, மனித வள மேலாண்மை துறை ஆகிய துறைகளின் அரசு செயலாளர்களைக் கொண்டு உயர்மட்ட குழு அமைக்கப்படும்.

16. வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மூலம் வீட்டு மனை பட்டா வழங்கப்படும்.

அரசு, மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், அவர்களின் சமூக பாதுகாப்பிற்கும், தேவையான பல மறுவாழ்வு திட்டங்களை, பல்வேறு துறைகளுடன் இணைந்து வழங்கி வருகிறது. வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வீடுகள் அமைத்து தருவதற்கு ஏதுவாக, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மூலம் வீட்டுமனை பட்டா வழங்கப்படும்.



17. கிராமங்களில் வறுமைக்கோட்டிற்கு கீழ் தகுதியுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் வீடு வழங்க கோரியும், நகரங்களில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் வீடு வழங்கக் கோரியும் விண்ணப்பிக்கும் பட்சத்தில் தகுதியின் அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்படும்.

மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டம், 2016-ல் வலியுறுத்தியுள்ளவாறு, மாற்றுத் திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் பல்வேறு சமூக பாதுகாப்பு, நலத்திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. அவ்வகையில், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம், வீடுகள் வேண்டி விண்ணப்பிப்பவர்களுக்கு, தகுதியின் அடிப்படையில் வீடுகள் வழங்கப்படும்.

18. தனியார் நிறுவனங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு தகுந்த வேலை வாய்ப்பினை கண்டறிய தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்புகளை உள்ளடக்கிய உயர்மட்டக் குழு அமைத்து வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு துறையில் வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு வழங்க உகந்த பணியிடங்களை நிபுணர் குழு மூலம் கண்டறிந்து அனைத்து துறைகளிலும் பணியிடங்கள் நிரப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனைத் தொடர்ந்து, தனியார் துறைகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு உகந்த பணியிடங்களை கண்டறியவும், வேலைவாய்ப்பு வழங்கவும் ஏதுவாக தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்புகளை உள்ளடக்கிய உயர்மட்டக் குழு அமைத்து வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



19. அறிவுசார் குறைபாடுடையோர், மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான 8 இல்லங்கள் திருநெல்வேலி, சேலம், திருச்சிராப்பள்ளி, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, நாமக்கல், தஞ்சாவூர், தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் ரூ.91.72 இலட்சம் செலவில் அமைக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் அறிவுசார் குறைபாடுடையோர் 65 மறுவாழ்வு இல்லங்களும், மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான 98 மறுவாழ்வு இல்லங்களும் செயல்பட்டு வருகின்றன. இப்பயனாளிகளின் எண்ணிக்கை, கூடுதல் தேவையினை கருத்தில் கொண்டு மேலும் கூடுதல் அறிவுசார் குறைபாடுடையோர், மனநலம் பாதிக்கப் பட்டோருக்கான 8 இல்லங்கள் திருநெல்வேலி, சேலம், திருச்சிராப்பள்ளி, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, நாமக்கல், தஞ்சாவூர், தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் ரூ.91.72 இலட்சம் செலவில் அமைக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

20. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் துறையின் மூலம் ஏற்படுத்தப்பட்ட உலமாக்கள் மற்றும் பணியாளர் நல வாரியத்தில் பயன்பெறும் மாற்றுத்திறனாளிகளின் ஓய்வூதியம் பெறும் வயது 50-லிருந்து 40-ஆக குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் துறையின் மூலம் ஏற்படுத்தப்பட்ட உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் உள்ள உறுப்பினர்களுக்கும் அவர்களது வாரிசுதாரர்களுக்கும் கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாரியத்தில் உறுப்பினர்களாக உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு ஓய்வூதியம் பெறுவதற்கான வயது வரம்பு 50-லிருந்து 40-ஆக குறைக்கப்படும்.

**மு.க. ஸ்டாலின்**
முதலமைச்சர்